Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC .No. 494/2024**

**Deposition of PW. 1 (PW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரபாகரன் | ஜாதி | : | |
| த/பெ | : | முருகன் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | இந்திராபுரம் | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 34/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.02.2026.

( எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் நடுப்பட்டி, இந்திராபுரத்தில் குடியிருந்துகொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 10.10.2023 ஆம் தேதி எனது சொந்த வேலை காரணமாக இந்திராபுரத்தில் இருந்து செம்பட்டிக்கு TN 57 8029 என்ற honda shine இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது, கோடாங்கிபட்டி அருகில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செம்பட்டி-வத்தலகுண்டு ரோட்டில் இடதுபுறமாக சென்றுகொண்டிருந்தபோது நான் சென்ற திசையில் எதிர்புறத்தில் வந்த அரசு பேருந்து வலதுபுறத்தில் சென்றுகொண்டிருந்தது. திடீரென அந்த பேருந்து இடதுபுறமாக ஏறி எனது வாகனத்தில் மோதி வாகன விபத்து ஏற்பட்டது. அந்த வாகன விபத்தில் எனக்கு வலது பக்க முழுங்காலுக்கு கீழ் பகுதியில் காயம் ஏற்பட்டது. எனது இடது பக்க தாடையில் காயம் ஏற்பட்டது. விலா எலும்பு முறிந்துவிட்டது. காயம்பட்ட நான் விபத்து நடந்த இடத்தில் இருந்த நபர்கள் என்னை 108 ஆம்புலன்ஸ் மூலமாக திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள். நான் சிகிச்சையில் இருந்தபோது செம்பட்டி காவல்நிலையத்தில் இருந்த வந்த போலிசார் என்னை விசாரித்தார்கள், அப்போது நான் நடந்த விசயத்தை சொன்னேன். அதை போலிசார் எழுதி பதிவு செய்து கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் **(அ.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பேருந்தை ஓட்டி வந்த நபரை நான் பார்த்தேன். அவரை பார்த்தால் நான் அடையாளம் காட்ட இயலும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த இடம் எந்த இடம் என்றால் கோடாங்கிபட்டி பிரிவு ரோட்டிற்கு அருகில் உள்ள டிவிஎஸ் கம்பெனி அருகில் ஆகும். ஆனால் உங்கள் புகாரிலும், முதல்

விசாரணையிலும் பாக்கிய மீனா நர்சிங்க ஹோம் அருகில் விபத்து நடந்ததாக தான் கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். பாக்கிய மீனா நர்சிங்க ஹோம் செம்பட்டி ரவுண்டானாவில் இருந்து 100 மீட்டருக்குள் தான் இருக்கும் என்றால் சரிதான். செம்பட்டி பஸ்டாண்டிலிருந்து ரவுண்டானாவை தாண்டி செல்லும் பேருந்துகள் வேகமாக செல்வதற்கு வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். அந்த இடத்தில் போக்குவரத்து அதிகமாக இருக்கும் என்றால் சரிதான்.

தெற்கிலிருந்து வடக்கு நோக்கு செல்லும் வாகனங்களும், வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்லும் வாகனங்களும் வேகமாக செல்ல முடியாது என்றால் சரிதான். பாக்கிய மீனா நர்சிங்க ஹோமிற்கும் மேலே சொன்ன டிவிஎஸ் கம்பெனிக்கும் எவ்வளவு தூரம் என்றால் 10 மீட்டர் இருக்கும். நீங்கள் சொல்வது உண்மையல்ல இரண்டு இடத்திற்கும் இடையே 200 மீட்டர் இடைவெளி இருக்கும் என்றால் சரிதான். நீங்கள் ராமநாதபுரத்தில் இருந்து அடிக்கடி செம்பட்டி பகுதிக்கு வந்து சென்றிருந்தால் உங்களுக்கு இந்த விபரங்கள் தெரிந்திருக்கும் என்றும், நீங்கள் ராமநாதபுரத்தில் குடியிருக்கவில்லை என்பதால் தான் உங்களுக்கு சம்பவ இடம் குறித்த விபரங்கள் தெரியவில்லை என்றால் சரியல்ல.

உங்களுக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. நீங்கள் சொல்லியுள்ள மாதிரி விபத்து ஏற்படவில்லை என்றும், நீங்கள் உங்களுக்கு முன்னால் சென்ற வாகனத்தை முந்தி செல்ல முயன்றபோது தான் இந்த வாகன விபத்து உங்களால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. உங்களுடைய கவனக்குறைவின் காரணமாக எதிரே வந்த வாகனத்தை கவனிக்காமல் வாகனம் ஓட்டியதால் தான் இந்த வாகன விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

வாகன ஓட்டுநரின் பெயர் மற்றும் விலாசம் ஆகியவற்றை போலிசார் சொல்லியபிறகு தான் உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். போலிசார் சொல்லிய விபரத்தின் அடிப்படையில் தான் நீங்கள் புகார் கொடுத்தீர்கள் என்றால் சரிதான்.

**அரசு தரப்பு மறு விசாரணை**

எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானால் அவரை உங்களால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியும்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC .No. 494/2024**

**Deposition of PW. 2 (LW.2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குணசுந்தரி | ஜாதி | : | |
| க/பெ | : | பிரபாகரன் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | நடுப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 34/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.02.2026.

( எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் நடுப்பட்டியில் குடியிருந்துகொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பிரபாகரன் எனது கணவர் ஆவார். கடந்த 10.10.2023 ஆம் தேதி காலை சுமார் 09.00 மணிக்கு எனது கணவர் சொந்த வேலையாக அவரது இருசக்கர வாகனமாக TN 57 8029 என்ற honda shine வாகனத்தில் கோடாங்கிபட்டி பிரிவுக்கு உள்ளே வரும் வழியில் அவருக்கு எதிரே வந்த அரசு பேருந்து அவர் மீது மோதி வாகன விபத்து ஏற்பட்டது. அந்த தகவலை விபத்து நடந்த இடத்தில் இருந்த ஒரு நபர் எனது கணவரின் செல்போனை எடுத்து அதிலிருந்து எனக்கு போன் செய்து தகவல் சொன்னார். எனது கணவரை சம்பவ இடத்திலிருந்து தூக்கிக்கொண்டு 108 ஆம்புலன்சில் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சேர்த்ததாக சொன்னார்கள். நான் உடனே திண்டுக்கல் அரசு மருத்துவமனை சென்று எனது கணவரை பார்த்தேன். எனது கணவருக்கு வலது பக்க மொட்டியில் அடிபட்டு, உடைந்துவிட்டது. வலது பக்கம் உள்ள தாடையில் அடிபட்டது. இடது பக்கம் உள்ள விலா எலும்பில் பட்டு எலும்பு முறிந்துவிட்டது. எனது கணவரை முதலில் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கா சேர்த்தோம். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக திண்டுக்கல் சிட்டி

மருத்துவமனையில் சேர்த்தோம். இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

கோடாங்கிபட்டி எந்த கோடாங்கிபட்டி என்றால் புதுகோடாங்கிபட்டி ஆகும். கோடாங்கிபட்டி பிரிவுக்கும் விபத்து நடந்த இடத்தற்கும் 1km இருக்கும் என்றால் சரிதான். யாருடைய கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்பட்டது என்று உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட பிறகு தான் நீங்கள் சென்று பார்த்தீர்கள் என்றால் சரிதான்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC .No. 494/2024**

**Deposition of PW. 3 (LW.3)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாகராஜ் | ஜாதி | : | |
| த/பெ | : | பிரபாகரன் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | திண்டுக்கல் | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் | வயது | : | 57/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.02.2026.

( எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் திண்டுக்கல், பாறைமேட்டு தெருவில் குடியிருந்துகொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பிரபாகரனை எனக்கு தெரியும். கடந்த 10.10.2023 ஆம் தேதி அ.சா.1 பிரபாகரன் அவரது இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது, செம்பட்டிக்கு அருகில் அரசு பேருந்து மோதி வாகன விபத்து ஏற்பட்டதாக அ.சா.1 ன் மனைவி எனக்கு தகவல் சொன்னார். நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று காயம்பட்ட பிரபாகரனை பார்த்தேன். அவருக்கு வலது பக்க மொட்டியில் காயம் இருந்தது. இடது பக்க விலா எலும்பு முறிந்துவிட்டது. வலது பக்க தாடையிலும் காயம் இருந்தது. பிரபாகரன் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பிறகு மேல்சிகிச்சைக்காக திண்டுக்கல் சிட்டி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

யாருடைய கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்பட்டது என்று உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட பிறகு தான் நீங்கள் சென்று பார்த்தீர்கள் என்றால் சரிதான்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor